*Volume No: 1* *Issue 1* *September 2016*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal of literary Explorations*
*ISSN:* 2456 - 4613
*IMIRJ, 1(1), 2016 [1-8]*

# அ.வெண்ணிலாவின் ‘நீரிலலையும் முகம்’ காட்டும் ‘பெண்’



**முனைவர்.திருமதி.ஆ.ஆனந்தி**
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி (தன்னாட்சி),
விருதுநகர்.
E-mail: ananthiandavar@gmail.com

**முன்னுரை**

மனித சமுதாயம் தோன்றும் போது ஆண், பெண் சம உரிமை இருந்திருக்கிறது. ஏற்றத்தாழ்வு ஏதும் காணப்படவில்லை. காலப்போக்கில் பெண்ணின் அதீத அறிவும், பொறுமையும் கண்டு வியந்த அல்லது பயந்த ஆண், காலப்போக்கில் அவளைக் கற்பு எனும் சிறையில் அன்பு, பொறுமை, தியாகம், அடக்கம் எனும் கம்பிகள் கொண்டு அடைத்தான். ஆண் சமூகத்தால் இன்றும் பெண் இவ்வாறு தான் ‘உருவாக்கப்படுகிறாள்’. இலக்கியங்களும் இவ்வாறான பெண்களையே பெரிதும் முன்னிறுத்துகின்றன. அவ்வகையில் நவீன இலக்கியங்களில் ஒன்றான ‘கவிதை’ இலக்கியத்தில், குறிப்பாக பெண் கவிஞர்களுள் ஒருவரான அ.வெண்ணிலாவின் ‘நீரிலலையும் முகம்’ எனும் கவிதை நூலில் பெண் குறித்த சிந்தனை எவ்வாறு அமைந்துள்ளது எனக் காண்பதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்:**

- நிலவுடைமைச் சமூகம் - நிலத்தை மையமாக் கொண்ட பெண்களைத் தலைமையாக கொண்ட வேளாண் சமூகம்
- வினை - செய் தொழில்
- ஆதாம் -மனித இனத்தில் தோன்றிய முதல் ஆண்/ ஆதாரம் -பைபிள்
- கரணம் - திருமணச் சடங்கு முறைகள்

**பொருளாதாரமும் குடும்பத்தலைமையும்**

என்று நிலவுடைமைச் சமூகம் தோன்றத் தொடங்கியதோ, அன்றே ஆண் ஆதிக்கமும் உருவாகிற்று எனலாம். குடும்பத்தை வழி நடத்துபவனாக, குடும்பப் பொருளாதாரத்தின் ஆணி வேராக, ஆண் தன்னை மாற்றிக் கொண்ட போது ஆதிக்க மனப்பான்மையும் அவனுடனே வளரத் தொடங்கி விட்டது.

தமிழில் கிடைக்கும் முதல் இலக்கியங்களான சங்க நூல்கள் முதல் இன்று வரை ஆணே பொருளைத் தேடுபவனாக, குடும்பத்திற்கு உழைத்து ஓடாய்த் தேய்பவனாகக் காட்டப்படுகின்றன.

"வினையே ஆடவர்க்கு உயிரே" (புறநானூறு : பா.135)

'அம்மாவின் பிரசவ வயிற்றுத்
தழும்புகளுக்கு நிகரானவை
அப்பாவின் காப்புக் காய்த்த
கைகள்' – (புதுக்கவிதை – 'தி இந்து' – நாளிதழ்)

கிட்டத்தட்ட இரண்டாயிரம் வருடங்கள் இடைவெளி கொண்ட இக்கவிதை வரிகள் இரண்டுமே குடும்பத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான பணத்தினைச் சம்பாதிக்கும் பொறுப்பு ஆணைச் சார்ந்தது என்பதையே காட்டுகின்றன.

பொருளாதாரமும் சொத்துரிமையுமே ஆணை ஆதிக்கவாதிகளாக மாற்றியதில் பெரும்பங்கு கொண்டிருக்கின்றன எனலாம். இன்று பெண்களுக்கு சொத்துரிமையும் உள்ளது. வேலைக்குச் செல்வதால் பொருளாதாரமும் உள்ளது. எனில் ஆணும் பெண்ணும் சமம் தானே. ஏன் இன்னும் ஏற்றத்தாழ்வு? என்ற கேள்வி பதிலற்றதாகவே காணப்படுகிறது.

**பெண் : உருவாக்கமும் அடையாளமும்**

குழந்தைப் பருவத்திலிருந்தே நம் சமூகம் ஆண், பெண் ஏற்றத்தாழ்வுடன் தான் வளர்கிறது. பள்ளிக் குழந்தைகளின் பாடப்புத்தகத்தில், அப்பா நாற்காலியில் அமர்ந்து செய்தித்தாள் படிக்கிறார், அம்மா காய்கறி நறுக்குகிறாள், சிறுமி வீடு பெருக்குகிறாள், சிறுவன் விளையாடுகிறான். அம்மாவும் பெண்ணும் வீட்டு வேலை செய்ய, அப்பாவும் பையனும் ஓய்விலும் விளையாட்டிலும் பொழுது போக்குகிறார்கள்.

இயல்பாகவே நம் மனதில் பதிந்து போய்விட்ட சமமற்ற இவ்வேறுபாட்டினை வெண்ணிலாவும்,

"உள்ளே வீசப்படும்
செய்தித்தாளை அப்பாவிடம் கொடுக்கவும்
கீரை விற்பவள் வந்தால்
அம்மாவைக் கூப்பிடவும்

கற்றுக் கொள்கிறது குழந்தை
யாரும் கற்றுத் தராமலேயே'' (ப.77)

என எழுதிச் சொல்கிறார். பெண்கள் சமத்துவமும் சுதந்திரமும் பெற்று விட்டனர் என்று கூறும் அறிவாளிகள் முகம் நோக்கி சுட்டுவிரல் நீட்டுகிறது இக்கவிதை.

பெண், ஆதாமின் விலா எலும்பிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டதாகக் கதை ஒன்று உண்டு. எலும்பிலிருந்து உயிர்த்தாலும் உலகின் உயிர்த்தலுக்கு அவளே மூலாதாரம் என்றாலும் இறுதியில் உயிரற்ற எலும்புத் துண்டாகவே, சமூகத்தால் அவள் எறியப்படுவதை,

''எலும்பிலிருந்து உயிர்த்ததாக
ஓதினார்கள்
புணர்ந்தும் புணரப்பட்டும்
கிளர்ந்து துளிர்த்தன உயிர்கள்
ஆற்றங்கரைகளைக் கண்டெடுக்கவும்
நாகரிகங்களை வளர்த்தெடுக்கவும்''
அவளே மூலாதாரம் ..........
உறிஞ்சப்பட்ட அவளின் அழகை
மென்றார்கள் சுவைத்தார்கள்
துப்பினார்கள்
அவளின் துயர் பொறுக்கா
அலை ஒன்று
கரை சேர்த்தது
எஞ்சிய அவளின்
எலும்புத் துண்டொன்றை'' (ப.88)

என்ற கவிதை தோலுரித்துக் காட்டுகிறது. பெண்ணால் உருவான, பெண்ணால் உருவாக்கப்பட்ட சமூகமானது, பெண்ணைப் பயன் முடிந்ததும் தூக்கியெறியும் பொருளாக உருவாக்கம் செய்யும் முரணை இக்கவிதை வழி உணர முடிகிறது.

திருமணம் என்பது ஒழுக்க வாழ்விற்கான ஒரு சடங்கு முறையாகும். இதனை,

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணமென்ப''
(தொல்காப்பியம் :கற்பியல் - நூ : 1091)

என்ற தொல்காப்பியர் நூற்பா உறுதிப்படுத்துகின்றது.

ஒழுக்கம் என்பது மனம் சார்ந்ததே என்றாலும் ஒழுக்க வாழ்விற்கான திருமண அடையாளங்கள் பெண்ணிற்கு மட்டுமே தாலியாக, மெட்டியாக, வகிட்டுக் குங்குமமாக தரப்பட்டுள்ளன. ஆணிற்கு?

பெண்களுக்கு பிள்ளைப் பிறப்பால் உண்டாகும் உடல் மாற்றங்களே திருமண வாழ்வின் நிரந்தர அடையாளங்களாய் நிற்கும் போது மேற்சொன்ன புற அடையாளங்கள் தேவை இன்மையை,

''மார்புக் காம்புகளும்
வயிற்றுச் சுருக்கங்களும்
சொல் லும் என் பிள்ளை பிறப்பின்
அடையாளத்தை பிறகெதற்கு
எதிர்பார்க்கிறீர்கள்? என் அடையாளத்தை
தாலிக் கயிற்றிலும் கால் மெட்டியிலும்
வகிட்டுச் சிவப்பிலும்'' (ப.55)

என வினாவாகத் தொடுக்கிறார் கவிஞர். இக்கவிதை ஆணுக்குத் தேவைப்படாத திருமண அடையாளங்கள், பெண்ணுக்கு

மட்டும் ஏன்? என்ற சிந்தனையைத் தூண்டுவதாய் உள்ளது.

**பெண்ணின் உணர்வுகள்**

வாழ்வில் பிரச்சனைகள், துன்பங்கள் நேரும் போது சாய்ந்து கொள்ளத் தோள் தேடுவது ஆண், பெண் இருவருக்கும் இயல்பே. என்றாலும் வெளியிடம், ஓய்வு, தடைபடாத நட்பு, மது, புகை எனப் பல காரணங்கள் ஆணுக்குத் துன்பம் மறக்கத் துணை செய்யும் சமூகத்தில் பெண் தன் துயர் மறக்க ஆடவனின் ஆதரவையே அதிகம் தேடுகிறாள். அச்சூழலில் காரியம் யாவற்றிலும் துணையாய் வர வேண்டியவன், கண்டு கொள்ளாத போது பெண்ணின் மனம் நொறுங்குகிறது.

இல்லற வாழ்வு என்பது ஆண், பெண் இருவரும் இணைந்து வாழ்வதெனினும்இருவருக்குமான வாழ்க்கை அங்கே வேறுபடுகிறது. பணம் சம்பாதிப்பது மட்டுமே ஆணுக்கு, பெண்ணுக்கோ பாரதிதாசன் ‘குடும்ப விளக்கில்’ காட்டும் அத்துணை வேலைகளும்.

இல்லற வாழ்வில் பெண்களின் பங்களிப்பினை, அவர்கள் படும் துயரத்தினை வைரமுத்து இவ்வாறு எழுதுகிறார்.

“பாவம் மனைவி இந்த<br>இல்லறக் கிரிக்கெட்டில்<br>கட்டிலறைக்கும்<br>சமையலறைக்கும்<br>ரன்கள் எடுத்தெடுத்த<br>ரணமாய்ப் போனாள்” (ப.126)

வைரமுத்து எனும் ஆணால் இவ்வாறு பெண்களைப் பார்த்து பரிதாபம் கொள்ளவும், ‘இது ஏன், ஆண்களுக்குப் புரியவில்லை’ எனக் கேள்வி கேட்கவும் மட்டுமே முடிகிறது. மாறாக வெண்ணிலாவோ, வீட்டு வேலையெல்லாம் முடித்த ஒரு பெண், தனக்கான ஆசுவாசமாய் கணவனை எதிர் பார்ப்பதை,

“இரவு கட்டில் இருட்டில் பார்த்ததுதான்<br>உன் முகம்<br>கையில் இருக்கும் புத்தகம் விட்டு<br>எழுந்து வந்து பார்த்துப் போயேன்<br>என்னை” (ப.16)

என எழுதுகிறார். இதில் தன் இருப்பை, கணவனின் அன்பை அருகாமையை உணர்த்த விரும்பும் ஆயிரமாயிரம் பெண்களின் குரலைக் கேட்கலாம்.

மற்றொரு கவிதை, ஆணிற்குள்ளேயே ஊறிப்போய் விட்ட, இயல்பான குணமாகிவிட்ட அலட்சிய, ஆதிக்க செயலைக் காட்டுவதாய் உள்ளது. காலைப் பொழுதில் தூங்கிக் கொண்டிருக்கிறாள் மனைவி. விடியலை அழகாக்க முத்தமிட்டோ, தலையை வருடியோ, விரல் பிடித்தோ எழுப்ப மாட்டானா கணவன் என ஏங்குகிறது மனம். என்றாலும் பெரும்பான்மையான உறவுகளில் நடப்பதனை,

“இவ்வளவையும் விடுத்து
‘ஏய்’ எனக் கால் தீண்டி
போகிற போக்கில்
எழுப்பிப் போகிறாய்” (ப.48)

என வேதனையுடனும், ஏக்கத்துடனும் காட்சிப்படுத்துகிறார்.

இதுபோன்ற உணர்வுகளை ஆண்கள் எழுதுவதை விட, பெண்ணே தன்னைப் பற்றிக் கூறுகையில் தான் அவை வேறு வடிவம் எடுக்கின்றன மொழியாலும் சொல்லும் விதத்தாலும்.

**பெண்ணுடல்**

ஆண், பெண் என்ற பாகுபாட்டை முதலில் உணர்த்துவது உடல் தான். பெரும்பாலும் இலக்கியங்களில் பெண் உடல் என்பது வர்ணனைக்கு உரிய, ஒரு பொருளாகத்தான் காணப்படுகிறது. சங்க இலக்கியம் தொட்டு இன்று வரை பெண்ணுடல் குறித்த பார்வையில் பெரியதாக மாற்றம் ஏதுமில்லை. பெண் கடவுளாக இருந்தாலும் உடல் வர்ணனை கட்டாயம் உண்டு.

இந்நிலை பெண் எழுத்தாளர்களின் குறிப்பாக பெண்ணியவாதிகளின் எழுத்தில் மறுஉருவம் கொண்டுள்ளது. தங்களின் உடல் அழகைப் பேசுவதை விட உடலின் வேதனையை, உடலமைப்பால் தங்களுக்கு நேரும் அவமானங்களை, உடலின் செயல்பாடுகளால் (தீட்டுகளால்) பல நேரம் புறக்கணிக்கப்படுவதை அதிகம் எழுதி வருகின்றனர்

வெண்ணிலாவின் கவிதைகளில் சில, மாதச்சுழற்சியின் (மாதவிடாய்) போது உண்டாகும் பெண்ணின் மன உணர்வை நன்கு வெளிக்காட்டுகின்றன. இது போன்று எந்தவொரு அவஸ்தையும் இல்லாது, அந்நாட்களில் கூட வீட்டு வேலைகளில் உதவாத, அந்நிகழ்வை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாத ஆண்களை நோக்கி,

“ஈரப் பிசுபிசுப்போடு
உட்கார்ந்து இருப்பீர்களா
ரத்தப் பெருக்கோடும்
உறங்க வேண்டியிருக்கு (ப.20)
…….

என வினவும் கவிஞர், அந்த நாட்களில் உண்டாகும் ஏக்கத்தையும் புறக்கணிப்பையும்,

“ரத்தம் தோய்ந்த ஆடைகளோடும்
நடுங்கும் கால்களோடும்
சாய்ந்து கொள்ளத் துழாவுகிறோம்
‘தொடாதே’ – ‘தள்ளி நில்’
என்கிறாள் அம்மாவும்” (ப.20)

எனப் பதிவு செய்துள்ளார். மாதவிடாய் ரத்தம் தூய்மையானது என் நிரூபித்து விட்டது நவீன மருத்துவம். என்றாலும் தீட்டு என்ற பெயரில் மாதந்தோறும் தீண்டாமைக் கொடுமைக்குப் பெண் உள்ளாக்கப்படுகிறாள். கோவிலுக்குள் மறுக்கப்படும் அனுமதி இன்னும் பலர் வீட்டுக்குள்ளும் இருக்கத்தான் செய்கிறது.

மாதச்சுழற்சி என்பது மாதம் ஒருமுறை வருவது தான் என்றாலும், வரும் முதல் கணத்தில் உண்டாகும் மனநிலையை,

"தேதி மாறாமல்
திட்டமிட்டதைப் போல்
மாதா மாதம்
நிகழ்கிறது
எனக்கான சுழற்சி என்றாலும்
நிகழும் முதல் கணம்
விபத்தொன்றை
சந்தித்தாற் போல்
அதிர்கிறது மனசு" (ப.126)

என இயல்பாகப் பதிவு செய்துள்ளார்.

தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பார்கள். இன்பமோ துன்பமோ தனக்கு உண்டானதைத் தானே வெளிப்படுத்தும் போது தான் அது முழுமையடைகின்றது. பெண்களின் தேவையை, வலியை, உணர்வை, வலிமையை, எண்ணங்களை, எத்தனையோ ஆண் எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். எழுதிக் கொண்டும் உள்ளனர் என்றாலும் அவ் எழுத்துகளில் இல்லாத ஈர்ப்பும் உயிர்ப்பும் பெண்களின் எழுத்துகளில் தான் காணப்படுகின்றன எனில் மிகையல்ல.

**பெண்ணும் திருமணமும்**

சமூகத்தில் ஒழுக்கத்தைக் காக்க ஒரு கருவியாக உருவாக்கப்பட்ட திருமணம் என்னும் நிகழ்வானது பெண்ணிற்குப் பல்வேறு நிலைகளில் சிக்கல் நிறைந்தே காணப்படுகிறது. காலம் தள்ளிச் சென்றால் முதிர்கன்னியாக, கணவன் இறந்து பட்டால் விதவையாக, இல்லற வாழ்வில் தன் சுயத்தை இழக்கும் பொம்மையாகவே பெண் சமூகத்தில் வாழ நேர்கிறது.

பெண்கள் முதிர்கன்னிகளாக வாழ்வதற்கு வரதட்சணை, வறுமை போன்ற பல காரணங்கள் சமூகத்தில் காணப்படுவதை பலரும் இலக்கியப்படுத்தியுள்ளனர். எனினும் பெண் கவிஞர்களின் கவிதைகளில் இவை பெரிய பிரச்சனையாக அலசப்படவில்லை. குறிப்பாக, வெண்ணிலாவின் கவிதைகளில் திருமணம் ஆகாது கவலைப்படும் பெண்கள் காணப்படவில்லை. திருமணத்தால் தன் சுயம் இழந்த, தன் இருப்பை உணர்த்த விரும்பும் பெண்களே அதிகம் கவனிக்க வைக்கின்றனர்.

வெண்ணிலாவின்,

"அடுத்த ஆண்டும்
வசந்தம் ஆர்ப்பாட்டமாய் வரும்
நான் மட்டும்
மணமாகப் போயிருப்பேன்!"(ப.19)

எனும் கவிதை, பிறந்து வாழ்ந்த வீட்டை, சொந்தங்களை நினைவுகளாய் மட்டுமே தூக்கிச் செல்லும் பெண் இனத்தின் வலி நிறைந்த வார்த்தைகள்.

மற்றொரு கவிதையில் ஒரு பெண் தன் கால்களைப் பற்றிப் பேசுகிறாள். வெடிப்பு எதுவுமின்றி நிலவாய் ஒளிர்ந்த தன் கால்கள் சாலைகளில் தென்படும்

சராசரிக் கால்களாய் மாறியதைக் கண்டு, காரணம் யோசித்து,

> "பிரத்யேகமான காரணம்
> ஒன்றுமில்லை தான்
> எனக்குத் திருமணமாகி
> குழந்தையும் பிறந்து விட்டது
> என்பதைத் தவிர" (ப.67)

எனக் கூறுமிடம், திருமணத்தால் பெண்களின் வாழ்வு பல நிலைகளில் மாற்றம் அடைவதைக் காட்டுகிறது.

**பெண்ணும் தாய்மையும்**

வேலைக்குச் செல்வது என்பது பெண்களின் விடுதலையைக் காட்டுவது; அவர்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் கொடுப்பது; தனித்தியங்கும் ஆற்றலை, மன உறுதியைக் கொடுப்பது என்றெல்லாம் கூறப்படுவது ஓரளவிற்கு மட்டும் உண்மையாகும். நுணுகிப் பார்த்தால் பெண்களுக்கு வேலை என்பது இரட்டைச் சுமையாகும்

குழந்தைகளை வளர்ப்பது அம்மாவின் வேலை என்று எழுதப்படாத சட்டம் புழங்கும் இவ்வுலகில் (இச்சமுதாயத்தில்), வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலையும், அவர்களின் குழந்தைகளின் நிலையும் வேதனைக்கு உரியன.

வெண்ணிலாவின் கவிதை ஒன்றில், சேய்க்கு உரம் ஊட்ட வேண்டிய தாய்ப்பால், வீணாய் வெளியேற்றப்படும் அவலமானது,

> "தாயின் வாசம்
> சொட்டு சொட்டாய்
> கோப்புகளில் இறங்குகிறது
> அவசரமாய்
> அலுவலகக் கழிப்பறைகளில்
> நுழைந்து பீச்சி விடப்படும் பாலில்
> தெறிக்கிறது
> பசியைத் தின்று அலறும்
> குழந்தையின் அழுகுரல்" (ப.47)

என நம்மைக் கண்ணீர் விட வைக்கிறது.

> "குழந்தை கையை பிரித்தெடுத்து
> விரையும் பாதங்கள்
> ஆசுவாசப்படும் பேருந்தில்
> அம்மாவின் அருகாமைக்கு ஏங்கும்
> குழந்தையின் இயல்பும்
> அன்னியமாய்ப்படும் அவசரத்திற்கு
> கூசிப் போகிறது மனசு" (ப.49)

இக்கவிதை வேலைக்குச் செல்லும் ஒரு தாயின்இயலாமையும்,ஆற்றாமையையும், குழந்தையின் அரவணைப்பற்ற நிலையையும் ஒரு சேரக் காட்டுகிறது.

**முடிவுரை**

1. தாய்வழிச் சமூகம் என்று, நிலவுடைமைச் சமூகம் ஆனதோ, அன்றே பெண்களின் நிலை வீழத் தொடங்கி விட்டது.

2. பொருளாதாரத்தால் பெண்கள் சிறிது சுதந்திரம் பெற்றது போன்று தோன்றினாலும் இல்லறச் சுமையோடு வேலையும் சுமையாகவே இருந்து வருகிறது.

3. பெண்ணின் ஆசை, ஏக்கம் போன்ற உணர்வுகள் பெண்

கவிஞர்களின் எழுத்தில் உயிர்ப்படைவதனை வெண்ணிலாவின் கவிதைகள் வழி உணர முடிகின்றது.

4. பெண்ணுடல் வர்ணனைக்கு உரிய பொருளாகவே கவிதைகளில் பெரிதும் காணப்படும் சூழலில், பெண்ணின் உடலில் நிகழும் மாற்றங்களை முன்னிறுத்துவதாய் கவிஞரின் கவிதைகள் உள்ளன.

5. திருமணம் என்ற சடங்கைச் சார்ந்த நிகழ்வுகளான முதிர்கன்னியர் நிலை, விதவையர் துன்பம், வரதட்சணைக் கொடுமை, தாய்மை போன்ற புற நிகழ்வுகளை விட திருமண பந்தத்தால், பெண்கள் இழக்கும் சுயங்களைப் பற்றியே பெரிதும் கவிஞர் எழுதியுள்ளார்.

6. மொத்தத்தில் நவீன இலக்கியமோ நவீன யுகமோ எதுவாக இருப்பினும் பெண்ணை ஒரு உற்பத்திப் பொருளாக, அழகுப் பண்டமாகவே பார்க்கின்றன. சமூகம் சார்ந்த பெண்களுக்கெதிரான சில கொடுமைகள் இலக்கியவாதிகளால் சுட்டப்பட்டாலும் அவை பரிதாப் பார்வையே கொண்டிருக்கின்றன.

7. பெண்ணிய இலக்கியவாதிகள் இத்தகைய பரிதாபப் பார்வையையோ, தெய்வம் எனும் உயர்த்துதலையோ விரும்பவில்லை. சமூகத்தில், வீட்டில் தங்களின் 'இருப்பை', 'சக மனுஷி' என்ற எண்ணத்தைப் புரிய வைக்கவே முயன்று வருகின்றனர் என்பதை வெண்ணிலாவின் கவிதைகள் உணர்த்துகின்றன.

**அடிக்குறிப்பு**


❖ அ.வெண்ணிலா, நீரிலலையும் முகம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.

❖ ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூ.ப.1999.

❖ வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், சூரியா வெளியீடு, சென்னை, நா.ப. 2002.